සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/08/PM/04/E.Power-2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ............................................ | දිනය<br>திகதி<br>Date | 2025.07.18 |
|---|---|---|---|---|---|

சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம்:-2025/01 இற்கான மூன்றாவது பிற்சேர்க்கை

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்,

**சமூக வலுவூட்டல் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் - 2025**
**அஸ்வெசும நன்மைகளைப் பெறும் பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு இனம்காணுதல்.**

சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025 தொடர்பில் எனது சம இலக்கமும் 2025.02.11ஆம் திகதியிடப்பட்டதுடன் சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01 மற்றும் அதன் பொருட்டு வெளியிட்ட முதலாவது மற்றும் இரண்டாவது பிற்சேர்கைகள் மூலம் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணம் பெற்ற பயனாளிக் குடும்பங்களை இனங்காண்பது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு மேலும் அஸ்வெசும பயனாளிகள் பெயர் பட்டியலை வழங்கிய பிரதேச செயலக பிரிவுகளில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை இனங்காண்பதும் முடிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது..

03. அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களிலிருந்து 2025 ஆம் ஆண்டின் பொருட்டு வலுவூட்டுவதற்கு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் 38 குடும்பங்களை இனம் காண்பதற்குத் தேவையான பெயர் பட்டியலை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நலன்புரி நன்மைகள் சபையிடமிருந்து பெற்றுக் கொண்டு மாவட்டங்களுக்கு வழங்குவதற்கு ஆயத்தமாக இருந்தாலும் இப்பெயர் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையில் இருந்து பெற்றுக் கொள்வதில் தாமதமாகி உள்ளது.

04. ஆகையினால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அஸ்வெசும பயனாளிகள் பெயர் பட்டியலை வழங்கும்போது ஏற்படுகின்ற தாமதங்களை தவிர்த்துக் கொள்வது, குடும்பங்களை இனம் காண்பதனை விரைவுப்படுத்துதல் மற்றும் வேலைத் திட்டத்தினை விரைவாக ஆரம்பிக்கும் பொருட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலக/மாவட்ட செயலகங்களில் உள்ள அஸ்வெசும பயனாளிகள் பெயர் பட்டியலை பயன்படுத்தி பொருத்தமான குடும்பங்களை இனம் காண்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக இணைப்பு ஒன்றுடன் சுற்றறிக்கை ஆலோசனைகள் வழங்கப்படுவதனை அறியத் தருகின்றேன்.

05. கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய உத்தியோத்தர்களுக்கும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

06. திட்டமிடப்பட்டுள்ள பிரகாரம் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தங்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

பீ.கே.எஸ்.சுபோதினி
மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதி (அபிவிருத்தி)
பணிப்பாளர் தலைமை அதிபதியின் பொருட்டு.

பிரதிகள்.

| | | |
|---|---|---|
| 1. செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | - | த.கூ.க.பொருட்டு |
| 2. பணிப்பாளர் நாயகம் தேசிய திட்டமிடல் திணைக்களம் | - | த.கூ.க.பொருட்டு |
| 3. கணக்காய்வாளர் தலைமையதிபதி - தேசிய கணக்காய்வு அலுவலகம் | - | த.கூ.க.பொருட்டு |
| 4. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | - | த.கூ.க.பொருட்டு |
| 5. பிரதம கணக்காளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | - | உ.ந.பொருட்டு |
| 6. பிரதான உள்ளக கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | - | உ.ந.பொருட்டு |
| 7. சகல பிரிவு தலைவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | - | உ.ந.பொருட்டு |
| 8. சகல தலைமைப் பீட/சமுதாய அடிப்படை வங்கி சங்க/வங்கி/கருத்திட்ட முகாமையாளர்கள் | - | உ.ந.பொருட்டு |
| 9. சகல தலைவர்கள் சமுதாய அடிப்படை அமைப்பு | - | உ.ந.பொருட்டு |

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)

1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | Hot Line :0112-889007 | | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |

**இணைப்பு - 01**

**சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் – 2025**
**அஸ்வெசும நலன்உதவி பெறும் பயனாளி குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு அடையாளம் காணுதல்**

## 01. அறிமுகம்.

2025 ம் ஆண்டில் வலுவூட்டலின் பொருட்டு அஸ்வெசும நலனுதவி பெறும் மற்றும் சமுர்த்தி நலனுதவி பெற்ற சகல பயனாளிகளிலிருந்து 400,000 குடும்பங்களை இணங் காணுதல், அவர்களின் அடிப்படை தகவல்களை சேகரித்தல் மற்றும் குடும்ப அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பது தொடர்பாக சுற்றரிக்கை ஆலோசனைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதன்படி சமுர்த்தி நிவாரணஉதவி பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அஸ்வெசும பயனாளிப் பெயர் பட்டியல்கள் வழங்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் இலக்குக் குடும்பங்கள் இணங்கானப்பட்டுள்ளர்.

**மேலும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அஸ்வெசும் பயனாளி பெயர் பட்டியல்களை வழங்கப்படாத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து 38 பயனாளிக் குடும்பங்களை அடையாளம் காணுவது துரிதப்படுத்த வேண்டியுள்ளது. ஆகையினால் நலன்புரி நன்மைகள் சபை ஊடாக பயனாளிகள் பெயர் பட்டியல்களை பெற்றுக் கொள்வது தாமதடைவதனால், கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலகம் / மாவட்ட செயலகம் பொறுப்பிலுள்ள, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினதும் அஸ்வெசும பயனாளி பெயர் பட்டியல்களை பயன்படுத்தி, அப் பயனாளிக் குடும்பங்களுள், தகுதியுள்ள 38 குடும்பங்களிலுருந்து அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை அறியத்தருகின்றேன்.**

## 02. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அஸ்வெசும பயனாளிக் குடும்பங்கள் 38 ஐ அடையாளம் காணுதல்.

இங்கு, தற்போது வெளியிடப்பட்டுள்ள சமுர்த்தி சுற்றரிக்கை இலக்கம் 2025/01 இந் பந்தி இலக்கம் 02ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

2.1. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து அஸ்வெசும நிவாரணம் பெறும் பயனாளிகளிடையே வறுமை வீத (Poverty Rank) அடிப்படையில் தயாரித்த பெயர் பட்டியல்களை வழங்குவது தாமதடையும் என்பதை அறியத்தருகின்றேன்.

2.2. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தங்களது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்து அஸ்வெசும பெயர் பட்டியல்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளுள் தகுதிவாய்ந்த ஆகக்கூடியது 38 குடும்பங்களை அடையாளம் காணப்படல் வேண்டும். இதன்போது சமூக நலன்கள் வகை மற்றும் வறுமை வீதத்தின் பிரகாரம் பயனாளிகளை அடையாளம் காணத்தேவையில்லை.

அஸ்வெசும பெயர் பட்டியல்கள் உத்தியோகத்தர்களிடம் இல்லாத விடத்து தேவையான பெயர் பட்டியல்களை பிரதேச செயலகம்/மாவட்ட செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

2.3. உத்தியோகத்தர்களினால், அஸ்வெசும பயனாளி குடும்பங்களை அடையாளம் காணும் போது, சமுர்த்தி சுற்றறிக்கை எண் 2025/01 இன் பந்தி 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அஸ்வெசும பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்களை பூர்த்தி செய்யும் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மேலும், 2025.07.07 திகதியிடப்பட்ட சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம். DSD/HO/06/EP/01/சுற்றறிக்கை-2025 மற்றும் சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம். 2025/05 ன் முதலாவது பிற்சேர்க்கைகளின் பிரகாரம், சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டம் - 2025 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட தகுதியுள்ள பயனாளிக் குடும்பங்கள் இருந்தால், இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்படி அடையாளம் காணப்பட்ட 38 குடும்பங்களுள் இணைத்துக் கொள்ளல் வேண்டும் என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். பயனாளி குடும்பங்கள் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

2.4. அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கான அடிப்படைத் தகவல்களை படிவம்-01 ஐப் பயன்படுத்தி சேகரிக்க வேண்டும். படிவங்கள் சமுர்த்தி வங்கியால் அதன் சொந்த செலவில் அச்சிட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

2.5. அதன் பிறகு, அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு கிராமியக் குழுவின் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். இங்கு, பெரும்பான்மையான உறுப்பினர்களின் இணக்கப்பாட்டினை பெறுவது

போதுமானது. இதன் போது, பெயர் பட்டியல் 2025/01 சுற்றறிக்கையின் முதலாவது பிற்சேர்க்கையின் இணைப்பு - 01 - A படிவத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு கிராமியக் குழுவின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும்.

2.6. 31.07.2025 க்கு முன் குடும்பங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டியது கட்டாயமாகும்.

2.7. கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில், பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பணியாற்றும்போது, முதல் சுற்றறிக்கையின் பந்தி இலக்கம் 2.2 இல் உள்ள அறிவுறுத்தல்களின்படி இலக்குக் குடும்பங்களை அடையாளம் காண அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

மேலும், பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மொத்த இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கணக்கிடும்போது, தேவையான வழிமுறைகளுக்கு 2025/01 இன் பத்தி 2.3 ஐப் பின்பற்ற வேண்டும்.

2.8. தற்போதைய சமுர்த்தி நிவாரண உதவியினைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளம் காணும் பெயர் பட்டியலில் அஸ்வெசும பெற ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பம் ஒன்று இருந்தால், அது அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, இப் புதிய பெயர் பட்டியலில் சேர்க்க சந்தர்ப்பம் வழங்கப்படும். மேலும், அந்தக் குடும்பத்தின் சார்பாக பிரிதொரு சமுர்த்தி நிவாரணம் பெற்ற குறைந்த வருமானம் பெருபவர் ஒருவரை பெயர் பட்டியலில் உட்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

2.9. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் முன்னோடிக் கருத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இந்த அறிவுறுத்தல்களின்படி மேலும் எந்த குடும்பங்களையும் அடையாளம் காணுதல் மேற்கொள்ளப்படக்கூடாது.

2.10. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அஸ்வெசும பயனாளிகள் பெயர் பட்டியலை வழங்கியுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஒவ்வொரு சமூகக் குழுவிலிருந்தும் அடையாளம் காண வேண்டிய இலக்கு குடும்பங்கள் இல்லையென்றால், குறித்த பிரிவின் அஸ்வெசும பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் அளவுகோல்களை பூர்த்தி செய்யும் பிற குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, இலக்கு குடும்பங்களை பூர்த்தி செய்யலாம்.

## 03. குடும்ப அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல்.

இந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டு மற்றும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கான குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், தொடர்புடைய படிவங்களை அச்சிடுவது தொடர்பான ஆலோசனைகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அஸ்வெசும பயனாளிகளின் பெயர் பட்டியல்கள் வழங்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்கு செயல்படுத்தப்படும் வாழ்வாதார அபிவிருத்தித் நடவடிக்கைகள் மற்றும் இளைஞர் யுவதிகளை தொழிலில் அமர்த்துவதற்கு ஏற்புடையதாக நடைமுறைப்படுத்த வேண்டிய நிகழச்சித்திட்டங்களை கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 04. Google Form ல் தகவல்களை பதிவிடுகள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Google Form இற்காக சேகரிக்கப்பட்ட அடிப்படைத் தகவல்களை, கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி பதிவேற்றப்படல் வேண்டும். மேலும், இந்தப் பணி 15.08.2025 க்கு முன் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறியத்தருகின்றேன்.

இந்தப் பணிக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்..